<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 92 /2017</u>

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17– ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி– (PW– 3)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி.A.பத்மபிரியா மூன்றாம் நிலை எழுத்தர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுவாமிநாதன் | தொழில் | | **காவல் உதவி ஆய்வாளர்( ஓய்வு)** |
| த/பெ. | : | **பாலசுப்பிரமணியன்** | ஊர் | | **நடுக்காவேரி** |
| வயது | : | 65/26 | மாவட்டம் | | **தஞ்சாவூர்** |

<u>**17.03.2026**</u>

<u>**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**</u>

<u>**முதல் விசாரணை:**</u>

1) நான் இறுதியாக தோகூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 08.07.2017ம் தேதியன்று ஒரத்தூர் பகுதியில் மணல் கடத்துவதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுகுமார், HC 2086 பாஸ்கர் ஆகியோரும் ஒரத்தூர் மாதாகோவிலுக்கு மேற்கே அன்றைய தினம் அதிகாலை 4.30 மணியளவில் சென்றபோது, டாரஸ் லாரியில் மணல் எடுத்து செல்லப்படுவது தெரிந்து அந்த வாகனத்தை நிறுத்தி விசாரித்தபோது அந்த வாகனத்தை ஓட்டியவர் பெயர் பிரபாகரன் த.பெ மனோகரன் என்பதும் அவர் சேலம் வாளப்பாடியை சேர்ந்தவர் என்பதாகவும் சொன்னார்.

2) அந்த லாரியின் பதிவு எண் TN54D 6499– அசோக்லேலண்ட் லாரி. அதில் சுமார் 3 யூனிட் ஆற்று மணல் இருந்தது . அந்த மணலுக்கு உரிமம் எதுவும் பெறவில்லை என்பதும் அந்த மணலை ஒரத்தூர் வெண்ணாற்றிலிருந்து அவர் எடுத்து வந்துள்ளார் என்பதும் விசாரணையில் தெரியவந்தது. அதனால் அந்த நபரை காரணம் கூறி கைது செய்தபோது , அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமுலத்தை என்னுடன் வந்த இரண்டு காவல் அலுவலர்கள் முன்னிலையில் பதிவு செய்து அந்த வாகனத்தை மகசரில் கைப்பற்றி வாகனத்துடனும் எதிரியுடனும் காவல்நிலையம் வந்து, மேற்படி நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து , அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். (( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) கைப்பற்றப்பட்ட வாகனத்தில் இருந்த மணலை பூதலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்து சான்று பெற்று, வாகனத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். (14.07.2017 ம் தேதிய மணல் ஒப்படைப்பு சான்று அசல் **அ.சா.ஆ–6 ஆகவும், படிவம் – 91 அ.சா.ஆ–7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது). மகசர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.** இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து 10.09.2017 ஆம் தேதி எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். இந்த வழக்கு சம்பவம் குறித்து எவ்வித தனிப்புகாரும் தாக்கல் செய்யவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு கிடைத்த தகவல் தனிநபர் மூலம் கிடைக்கப்பட்டதா, மேலதிகாரி மூலம் கிடைக்கப்பட்டதா என்றால் தனிநபர் மூலம் கிடைக்கப்பட்டது. திடீர் சோதனைக்கு கிளம்பியதால் அன்றையதினம் பொதுநாட்குறிப்பில் அதுகுறித்து நான் பதிவு செய்யவில்லை என்றால் சென்றபோது பதிவு செய்யவில்லை, வந்தபிறகு பதிவு செய்தேன். காவல்நிலையத்திலிருந்து நேரடியாக ஒரத்தூர் சென்றேன். 3 வாகனத்தில் தனிதனியாக சென்றோம். ஒரத்தூர் மாதாகோவில் பகுதி குடியிருப்பு நிறைந்த பகுதி என்றால் சரிதான்.

2) ஒரத்தூருக்கு சோதனை செய்ய சென்றதை அந்த பகுதியிலுள்ள Beat புத்தகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. வாகனத்தை மறித்து எதிரியை கைது செய்து, அதே இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். 08.07.2017ம் தேதி காலை 4.30 மணிக்கு கைதுசெய்து , அப்போதே மகசரும் தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். அன்றையதினம் 5.30 மணிக்குதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பபட்டது என்றால் காவல்நிலையம் வந்து பதிவு செய்தேன்.

3) ஒரத்தூர் கிராமத்தை சேர்ந்த தனிநபர்கள் யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அதிகாலை நேரம் என்பதால் யாரையும் சாட்சியாக விசாரிக்க முடியவில்லை. மணலுடன் லாரியை கைப்பற்றியது குறித்து அந்த பகுதி கிராம நிர்வாக அலுவலருக்கோ , வட்டாட்சியருக்கோ , கோட்டாட்சியருக்கோ அன்றையதினம் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றிய லாரியில் மணல் ஏற்ற பயன்படுத்தும் மண்வெட்டி, சவுல் கூடை ஆகிய எதுவும் இல்லை என்றால் சரிதான். மணல் எந்த பகுதியில் இருந்து ஏற்றப்பட்டது என்பதை நேரில் சென்று பார்வையிட்டேன். மணல் ஏற்றப்பட்ட இடம் தொடர்பாக பார்வைமகசர் எதுவும் தயார் செய்யவில்லை.

4) இந்த வழக்கில் புகார்தாரரும் நானே , விசாரணை அதிகாரியும் நானே என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சொன்ன தேதியில், சொன்னயிடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், லாரியை கைப்பற்றவில்லை என்றும் , புள்ளி விபர கணக்கிற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்து உரிய புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. லாரியில் மணலை யார் ஏற்றினார் என்று எனது விசாரணையில் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான்.

_

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
திருவையாறு.